# ஆண்டறிக்கை 2020-2021

கொரோனா வைரஸ் காரணமாக வகுப்புகள் மற்றும் தேர்வுகள் இணையவழியில் நடத்தப்பட்டது. 2021 பிப்ரவரியில் கல்லூரி திறக்கப்பட்டபின் மாணவர்களின் நலனுக்காக சுழற்சித் தேர்வு ஒருமுறை நடத்தப்பட்டு அதில் மதிப்பெண் குறைவான மாணவர்களை படிக்க வைத்து மீண்டும் மறுதேர்வு நடத்தப்பட்டது.

ஒரு பருவத்திற்கு இரண்டு ஒப்படைப்புகள் மாணவர்களிடம் இருந்து பெறப்பட்டு மதிப்பெண் வழங்கப்பட்டது.

மாதிரித்தேர்வு நடத்தி பருவத்தேர்வுக்கு மாணவர்களை தயார் செய்தல்.

**தமிழ் இலக்கிய மன்ற விழா மற்றும் விருது வழங்கும் விழா**




அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை நடத்திய இலக்கிய மன்ற விழா மற்றும் விருது வழங்கும் விழா 01.03.2021 அன்று காலை 11 மணி அளவில் போப் ஜான் கலையரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர் தமிழ் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கு.சின்னப்பன் அவர்கள் கலந்துகொண்டு சிந்தனையை மாற்றுங்கள் வாழ்க்கை மாறும் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## கலைநிலா விருது

2019-2020 ஆம் கல்வியாண்டில் கலைஞன் பதிப்பகம் நடத்திய பல்வேறு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கு இவ்விழாவில் 129 கலைநிலா விருதும், பேராசிரியர்களுக்கு இரண்டு தமிழ் ரத்னா விருதும் வழங்கப்பட்டது.




## இணையவழியில் விருது

யாவரும் கேளீர் திறன் வளர் சங்கம் நடத்திய இணைய வழி நுண்களைப் போட்டியில் தமிழ்த்துறை பேராசிரியர்களின் வழிகாட்டுதலின் கீழ் 46 மாணவர்கள் யாவரும் கேளீர் விருதினைப் பெற்றனர். இதில் வணிகவியல் கணினி பயன்பாட்டுத்துறை மூன்றாமாண்டு மாணவர் லிபின்சன் பன்னாட்டளவில் இசைப்போட்டியில் முதலிடம் பெற்றார்.






மேலும் தனித்திறன் நிகழ்ச்சியில் திறன் யாழ் விருதினையும் பெற்றவர்.